பக்கங்கள் – 12
விலை – ரூபா 50
Registered as a Newspaper
# உதயன்
சுடர் : 39
கதிர் : 193
வியாழக்கிழமை
06 ஜூன் 2024







கடமைநேரத்தில்

## சங்கானை உதவிப் பிரதேச செயலர் 'உதயன்' அலுவலகத்தில் அடாவடித்தனம்

யாழ்ப்பாணம், ஜூன் 6
சங்கானை பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலர் திருமதி கிருஸ்ணவதனா செந்தூரன், கடமை நேரத்தில் உதயன் அலுவலகத்துக்கு நேற்றைய தினம் வருகை தந்து அடாவடித்தனத்தில் ஈடுபட்டார். சங்கானை உதவிப் பிரதேச செயலர், சம்பளமின்றி பணியை தொடர்வதுடன், அதேயிடத்தில் 9 ஆண்டுகள் பணியாற்றுவதாகவும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக பெறப்பட்ட தகவல் 'உதயன்' பத்திரிகையில் வெளியாகியிருந்தது. பதவிநிலை அலுவலர்கள் பிணைப்பணம் செலுத்த வேண்டும். 11



## ஜூன் 8 ஆம் திகதி மோடி பதவியேற்பு

### கலைக்கப்பட்டது மக்களவை

புதுடில்லி, ஜூன் 6
இந்திய மக்களவைத் தேர்தலின் முடிவுகள் வெளியாகியுள்ள நிலையில், பிரதமர் மோடி தொடர்ந்து மூன்றாவது முறையாக எதிர்வரும் 8ஆம் திகதி பதவியேற்கவுள்ளார். 543 தொகுதிகளைக் கொண்ட இந்திய மக்கள 10

## பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்கு இடம்!

### சஜித் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 6
ஐ.நா. பாதுகாப்பு சபையில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்புரிமை வழங்கப்படவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளார். இதற்கு இலங்கையின் முழுமை 11

# பொதுவேட்பாளருக்கு பொதுக்கட்டமைப்பு!

### தமிழ் மக்கள் பொதுச்சபை நேற்று ஒன்றுகூடித் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூன் 6
ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலில், பொதுவேட்பாளரை நிறுத்துவது தொடர்பான கலந்துரையாடல்களை மேற்கொள்ளவும் மேலதிக நடவடிக்கைக்காகவும் பொதுக்கட்டமைப்பொன்றை உருவாக்கிச் செயற்படுவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. 11

## சாரதிகளின் போராட்டத்துக்கு பட்டதாரி அலுவலர்கள் ஆதரவு!

யாழ்ப்பாணம், ஜூன் 6
இடமாற்றத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரி வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கம் முன்னெடுத்துள்ள போராட்டத்துக்கு ஆதரவு வழங்குவதாக வடக்கு மாகாண அரசாங்க சேவை பட்டதாரி உத்தியோகத்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.
இதற்கு அமைவாக இன்றையதினம் காலை 9 மணி தொடக்கம் 11

## தமிழ்த் தேசிய இருப்புக்கான முன்மொழிவுகள் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 6
தற்கொடைத் தியாகி பொன்.சிவகுமாரனின் 50ஆவது ஆண்டு நினைவு நாளான நேற்றுப் புதன்கிழமை தமிழ்த்தேசிய இருப்புக்கான மூலோபாயக் கொள்கைத் திட்டமிடலுக்கான ஐந்து முன்மொழிவுகளை, ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு வெளியிட்டுள்ளது.
இது தொடர்பில் ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு நேற்று மாலை வெளியிட்டுள்ள ஊடக 11

## அத்துமீறலை நிறுத்தினால் தமிழகத்தோடு பேச்சுகள்

### கடற்றொழில் இணையத்தின் செயலர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 6
இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடிப்பதை நிறுத்திக்கொண்டால் அவர்களுடன் பேசுவதற்கும், இந்தப் பிரச்சினையை இலகுவாக முடித்துக்கொள்வதற்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம் என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலர் என்.எம்.ஆலம் தெரிவித்தார். 11

## முல்லையிலிருந்து ஆறு பேர் தமிழகத்தில் நேற்றுத் தஞ்சம்

முல்லைத்தீவு, ஜூன் 6
முல்லைத்தீவிலிருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர் தமிழகம் இராமேஸ்வரத்தில் நேற்றுத் தஞ்ச மடைந்துள்ளனர்.
இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து, வாழமுடியாத நிலையில் 11

## ரணிலே முன்; பெரமுன பின்!

கொழும்பு, ஜூன் 6
ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தனது நிலைப்பாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்த பின்னரே, வேட்பாளர் விவகாரம் தொடர்பான தனது நிலைப்பாட்டை அறிவிக்கவுள்ளதாக பெரமுன தெரிவித்துள்ளது.
பொதுஜன 11

## சிவகுமாரனின் நினைவேந்தல் உரும்பிராயில் உணர்வுபூர்வம்

### பல கட்சிகளின் தலைவர்களும் பங்கேற்பு

யாழ்ப்பாணம், ஜூன் 6
ஈழத் தமிழின விடுதலைப் போராட்டத்தின் முன்னோடியும், முதற் தற்கொடையாளருமான தியாகி பொன்.சிவகுமாரனின் 50 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்றுப் புதன்கிழமை காலை 9.30 மணியளவில் உரும்பிராய்ச் சந்திக்கு அருகில் அமைந்துள்ள பொன். சிவகுமாரனின் உருவச்சிலையடியில் தியாகி பொன்.சிவகுமாரன் நினைவேந்தல் குழுவின் 11

## கனடா அனுப்புவதாக மோசடி; ஒருவர் பொலிஸாரால் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 6
கனடா அனுப்புவதாகத் தெரிவித்து, பணமோசடியில் ஈடுபட்ட சந்தேகநபரை யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர். கனடாவில் வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாகத் தெரிவித்து, சாவகச்சேரியைச் சேர்ந்த இளைஞரிடம் இருந்து 31 இலட்சம் ரூபா மோசடி செய்யப்பட் 10


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரச் சட்டவரைவு அரசமைப்புக்கு முரண்

## உயர்நீதிமன்றம் தீர்ப்பு



**கொழும்பு, ஜூன் 6**
**இலங்கை மின்சார சட்டவரைவின் பல சரத்துகள் அரசமைப்புக்கு முரணானது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.**

அரசாங்கத்தால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மின்சாரச் சட்ட வரைவுக்கு எதிரான மனு விசாரணையின் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு சபாநாயகரால் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.
தீர்ப்பை அறிவித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, நாடாளுமன்றத்தின் சிறப்புப் பெரும்பான்மை மற்றும் வாக்கெடுப்பு மூலம் மட்டுமே சட்டவரைவு நிறைவேற்றப்படவேண்டும் என உயர்நீதிமன்றத் தீர்ப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.
உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி, இந்தச் சரத்துகள் திருத்தப்பட்டால் சட்டமூலம் எளிய பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (எ-இ)

## தேர்தல் பரப்புரை ரணில் மும்முரம்



யாழ்ப்பாணம், ஜூன் 6
ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து தமது பிரசாரப் பணிகளை முன்னெடுப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட குழுவொன்றை அமைத்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இக்குழுவுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தேசிய தேர்தல் ஏற்பாட்டாளராக அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவும், ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய செயலாளராக ரவி கருணாநாயக்கவும், தேர்தல் தொடர்பான பிரதிச் செயலாளராக ஜனாதிபதி சட்டத்தரணி ரொனால்டி பெரேராவும் நியமிக்கப்பட்டுள்ளனர். அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாளர் பதவியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. புதிய பொருளாளராக மொஹமட் பிரோஸ் பாருக் நியமிக்கப்பட்டுள்ளார். பிரதித் தலைவர், செயலாளர், தவிசாளர் உள்ளிட்ட பதவிகளில் மாற்றங்களை ஏற்படுத்தாதிருக்கவும் செயற்குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. (எ-25-44)

## சிக்கல்களை தீர்க்கவே வேட்புமனுக்கள் இரத்து!

கொழும்பு, ஜூன் 6
உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்காகத் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுவை இரத்துச் செய்வது தொடர்பாக அவதானம் செலுத்தவேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கியுள்ள ஆலோசனை தேர்தலை நடத்தாமல் இருப்பதற்காக அல்ல. மாறாக வேட்புமனு தாக்கலால் ஏற்பட்டுள்ள சிக்கல்களை தவிர்த்துக் கொள்வதற்காகவே இவ்வாறான ஆலோசனை வழங்கப்பட்டது.
இவ்வாறு உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகள் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்பர தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டு தேர்தல் நடத்தப்படாமலிருப்பதால் அரச உத்தியோகத்தர்கள் உட்பட பல தரப்பினரும் எதிர்கொண்டுள்ள சிக்கல்கள் மற்றும் அசௌகரியங்களைக் கருத்தில்கொண்டே இந்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.
வேட்புமனு தாக்கல் செய்துள்ள அரச ஊழியர்கள் தற்காலிக இட மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். சிலர் உயிரிழந்துள்ளனர். சிலர் கட்சி மாறியுள்ளனர். சிலர் அரசியலிலிருந்தே விலகியுள்ளனர்.
இவ்வாறான சிக்கல்களை கருத்திற்கொண்டே வேட்புமனுவை இரத்து செய்யவேண்டும் என்று பல தரப்பினரிடமிருந்தும் எமக்கு கோரிக்கைகள் கிடைத்துள்ளன. ஆயினும் தற்போது நீதிமன்றத்தில் 4 வழக்குகள் விசாரணையில் இருப்பதால் வழக்கு விசாரணைகள் நிறைவடையும் வரை எம்மால் எந்த நடவடிக்கையும் எடுக்கமுடியாது - என்றார். (எ-இ)

## மொட்டு வேட்பாளருக்கே கோத்தாபயவின் ஆதரவு!

கொழும்பு, ஜூன் 6
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி பெயரிடும் ஜனாதிபதி வேட்பாளருக்கே கோத்தாபய ராஜபக்ச ஆதரவு வழங்குவார் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் சாகல காரியவசம் தெரிவித்தார்.
சர்வஜன அதிகாரம் எனும் அரசியல் கூட்டணி ஊடாக வியத்கம உறுப்பினர் ஒருவரை ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்கும் முயற்சியின் பின்னணியில் கோத்தாபய ராஜபக்ச இருக்கின்றார் எனத் தெரிவிக்கப்படும் கருத்துத் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது-
கோத்தாபய ராஜபக்ச ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் உறுப்பினர், அவ்வாறு உறுப்புரிமை பெற்றதால்தான் அவரால் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடமுடிந்தது. மொட்டுக் கட்சியின் வேட்பாளருக்கே அவர் ஆதரவு வழங்குவார் என்பது உறுதி. மாறாக ஏனைய அரசியல் சக்திகளுக்கு அவர் ஒத்துழைப்பு வழங்கமாட்டார். அரசியல் சூழ்ச்சி நடவடிக்கையிலும் ஈடுபடமாட்டார் - என்றார். (எ-44)

## மொட்டுக்கட்சி வேட்பாளர் தீர்மானிக்கப்படவில்லை!

### சாகல காரியவசம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 6
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை கட்சி இன்னும் தீர்மானிக்கவில்லை என்று அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் சாகல காரியவசம் தெரிவித்தார். அதேவேளை அரகலயவின் பின்னணி தொடர்பில் அடுத்த தங்களது ஆட்சியில் முறையாக விசாரணை நடத்தப்பட்டு உண்மைகள் கண்டறியப்படும் எனவும் அவர் கூறினார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது-
நாட்டில் மீண்டுமொருமுறை அவ்வாறான சம்பவம் இடம்பெறாமல் இருப்பது உறுதிப்படுத்தப்படும். ஜனாதிபதித் தேர்தலை மொட்டுக் கட்சியே வெற்றிகொள்ளும். உரிய நேரத்தில் வேட்பாளர் பெயரிடப்படுவார் - என்றார். (எ-44)

## இந்தியா செல்லவுள்ள ரணில்

கொழும்பு, ஜூன் 6
இருநாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இந்தியாவுக்குச் செல்கின்றார்.
இந்தியத் தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ள நிலையில், இந்தியாவின் புதிய பிரதமருக்கு நேரடியாகச் சென்று வாழ்த்துத் தெரிவிக்கும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் டில்லிப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-இ)



## நகைச்சுவைக் கட்சி!

### ரஞ்சித் மத்தும பண்டார கிண்டல்

கொழும்பு, ஜூன் 6
நாட்டு மக்களுக்கு நகைச்சுவை அரசியலை வழங்கும் கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சி மாறியுள்ளது. அந்தக் கட்சியுடன் நான் ஒரு போதும் இணையப்போவதில்லை.
- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
2019ஆம் ஆண்டுவரை நான் ஐக்கிய தேசியக் கட்சியில்தான் இருந்தேன்.
அதன்பின்னர் ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கிவிட்டு அந்தக் கட்சியுடன் இணைந்து தற்போது அக்கட்சியின் பொதுச்செயலாளராகப் பணியாற்றிவருகின்றேன்.
ஐக்கிய மக்கள் சக்தியில்தான் எனது உறுப்புரிமை உள்ளது.
எனவே, எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவோ அல்லது உறுப்புரிமை வழங்கவோ ஐக்கிய தேசியக் கட்சிக்கு எவ்வித உரிமையும் கிடையாது. அக்கட்சி நகைச்சுவை செய்கின்றது.
ஐக்கிய மக்கள் சக்திதான் வெற்றிபெறும் கட்சி. எனவே, மூழ்கியுள்ள கப்பலில் யார் ஏறுவது? நான் ஐக்கிய தேசியக் கட்சி பக்கம் போகமாட்டேன் - என்றார். (எ-44)

## சீரற்ற காலநிலையால் 30 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 6
நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் மே 15 ஆம் திகதி முதல் ஜூன் 4 ஆம் திகதிவரையான காலப்பகுதியில் 30 பேர் உயிரிழந்துள்ளனர்.
மே 15 ஆம் திகதி முதல் நேற்றுவரை 71 வீடுகள் முழுமையாகவும், 9 ஆயிரத்து 378 வீடுகள் பகுதியளவும் சேதமடைந்துள்ளன என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார். இடர்நிலை இழப்பீடு வழங்குவது தொடர்பான மதிப்பீட்டு பணி இடம்பெற்றுவருகின்றது. உயிரிழந்தவர்களுக்கு இறுதிக்கிரியைகளுக்காக 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. மேலதிக இழப்பீடு வழங்குவ துபற்றியும் ஆராயப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மோடியின் ஆட்சியே இலங்கைக்கு நன்மை

## ஹெல உறுமய தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 6**

**இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியின் வெற்றி இலங்கைக்கு நன்மை பயக்கும் என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் பாரதிய ஜனதாக் கட்சி கூட்டணி 300 முதல் 350 ஆசனங்களைக் கைப்பற்றக்கூடும் என எதிர்பார்த்தேன். ஏனெனில் இந்தியாவில் ஸ்தீரமானதொரு ஆட்சி இருக்கும் போது, இலங்கை தொடர்பான கொள்கையை மத்திய அரசே தீர்மானிக்கும்.

மத்திய அரசு பலவீனமாகி, ஆட்சியமைக்க தமிழ் நாட்டின் உதவி தேவைப்படும்பட்சத்தில் இலங்கை தொடர்பான கொள்கையை தமிழகமே தீர்மானிக்கும். அப்போதுதான் இரு நாட்டுக்கும் இடையிலான உறவில் தாக்கம் ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

# பல்கலை விண்ணப்பம் 14 ஆம் திகதி ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 6

புதிய கல்வியாண்டுக்கான மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களை இம்மாதம் 14ஆம் திகதி முதல் ஜூலை மாதம் 5ஆம் திகதி வரை கோருவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இந்த ஆண்டு, பல்கலைக்கழக சேர்க்கை கையேடு ஆணைக் குழுவின் www.ugc.ac.lk என்ற இணையத்தளத்தில் கிடைக்கப்பெறும்.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக இம்முறை அச்சிடப்படவில்லை.

விண்ணப்பத்தில் ஏதேனும் திருத்தங்கள் இருப்பின் அதற்கு மேலும் மூன்று வார கால அவகாசம் அளிக்கப்படும், அதாவது ஜூலை 19 ஆம் திகதி வரை விண்ணப்பதாரர்கள் ஒரு முறை மட்டுமே திருத்தங்களைச் செய்யமுடியும் என்றும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச-இ)

# சம்பிக்கவுக்கு வலைவிரிப்பு

கொழும்பு, ஜூன் 6

ஐக்கிய மக்கள் சக்தியை பலப்படுத்த சிங்கள - பௌத்த வாக்கு வங்கியை குறிவைக்க குடியரசு முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்கவை அரவணைக்க பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி முயற்சித்து வருகின்றது.

இதற்கான பேச்சுகள் ஆரம்பமாகியுள்ளன என்று அறியமுடிகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பதவியை வகிக்கும் சரத் பொன்சேகா அக்கட்சியில் இருந்து விரைவில் வெளியேறத் திட்டமிட்டுள்ளார். ராஜித சேனாரத்னவும் ரணிலை ஆதரிக்கும் நிலைப்பாட்டிலேயே உள்ளார்.

இந்த நிலையிலேயே சம்பிக்க ரணவக்கவுக்கு சஜித் தரப்பு வலைவிரித்துள்ளது. இதேவேளை கடந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி பட்டியலின் கீழ்தான் சம்பிக்க ரணவக்க போட்டியிட்டார். அதன்பின்னர் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து வெளியேறி, புதிய கட்சியை உருவாக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-44)

# டெங்கு பரவும் ஏதுநிலை 10,000 ரூபா தண்டம்!



யாழ்ப்பாணம், ஜூன் 6

தேசிய டெங்கு வாரத்தை முன்னிட்டு நீர்வேலி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் என். உதயபாலா தலைமையில் டெங்குக் கட்டுப்பாட்டுச் சோதனை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது டெங்கு நுளம்புக் குடம்பிகள் அவதானிக்கப்பட்ட 11 குடியிருப்பாளர்களுக்கு எதிராக யாழ். மேலதிக நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கு விசாரணை கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது ஏழு குடியிருப்பாளர்கள் சமுகமளித்த நிலையில் ஒவ்வொருவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

வழக்கு விசாரணைக்கு சமுகமளிக்காத ஏனைய நால்வருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. (ச-17)

## மோடிக்கு ரணில் வாழ்த்து

இந்திய மக்களவைத் தேர்தல் முடிவுகள் தொடர்பில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திரமோடியின் தலைமையின் கீழான சுபீட்சமான முன்னேற்றத்தின் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையின் வெளிப்பாடே இந்தத் தேர்தல் வெற்றி -என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-இ)

# நிதி முகாமைத்துவ சட்டத்தில் திருத்தங்கள் சேர்க்கப்படும்!



## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள அரச நிதி முகாமைத்துவ சட்ட வரைவில் மேலதிகமாக உள்ளடக்கப்படவேண்டிய சில திருத்தங்கள் அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இது தொடர்பில் சட்டமா அதிபரிடம் ஆலோசனை கோரியுள்ளோம். வெகுவிரைவில் திருத்தப்பட்ட சட்டவரைவு சமர்ப்பிக்கப்படும். அதேவேளை, அரச நிதி முகாமைத்துவம் நாட்டுக்கு மிக முக்கியமானது. கடந்த காலத் தவறுகளைத் திருத்திக் கொண்டு நிதி ஒழுக்கத்தை சிறந்த முறையில் கடைப்பிடிப்பது இந்தச் சட்ட வரைவின் பிரதான நோக்கமாகும். இந்தச் சட்ட வரைவில் அரசாங்கம் வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுகிறது - என்றார். (எ-இ)



# தினம் தெரியுமோ?

**இப்ப நல்லதுக்கு காலமில்லை. ஆனால் தட்டிச் சுத்துறவைதான் வசதியா வாழ்ந்துகொண்டிருக்கினம். அப்பிடியே ஊரையே அடிச்சு உலையில போடக்கூடிய பெரும் 'எவிச்சோலுகள்' நிறையப்பேர் எங்களுக்குள்ள வரத் தொடங்கிட்டினம். ஆனால் அவையும் கனகாலத்துக்கு நிண்டு பிடிக்கமுடியாது. அதாலதான் அவையள் ஏதோ ஒரு விதத்தில் அம்பிட்டபடியே இருக்கினம். அப்பிடிக் கிட்டடியில அம்பிட்டவர் ஒரு கள்ள டாக்குத்தர். ஆளுக்கும் மெடிசினுக்கும் 'மெக்கா' அளவு தூரம். ஆனால் எங்கையோ ஆரையோ பிடிச்சு, டாக்குத்தர்மார் பாவிக்கிற மாதிரி ஒரு ஐடெண்டி கார்ட்டை செய்துபோட்டு, அதைவைச்சு பேஸ்புக்கிலையும், வட்ஸப்பிலையும் வெளிநாட்டுக்காரரை வளைச்சுக்குத்தி, கோடிக்கணக்கில காசைக் கறந்திருக்கிறார் இந்தக் கள்ள டாக்குத்தர்.**

**'என்னட்ட மூண்டு கோடி ரூபா காசு இருக்கு. ஆனால் அந்தக் காசை எனக்காக சேர்க்கேலை. எனக்குத் தேவையுமில்லை. இஞ்சயுள்ள ஏழைச்சனத்துக்கு ஒரு ஹொஸ்பிட்டல் கட்டி இலவசமா நல்ல மெடிசின் குடுக்கோணும். அதுதான் என்ர கனவு. அதில நீங்களும் சேர்ந்தால் உங்களுக்கும் புண்ணியம் வந்துசேரும். இதால எனக்கு ஒரு ஆதாயமுமில்லை. தேவையெண்டால், உங்கட காசை பிறகு திருப்பியும் தரலாம்' எண்டுதான் உந்தக் கள்ள டாக்குத்தர் முதலில தூண்டிலைப் போடுவார். அதுக்கு ஆதாரமா தன்ர பேர்ல நிலையான வைப்பில மூண்டு கோடி இருக்கிற வங்கி உறுதிப்பத்திரத்தையும் காட்டுவார். ஆனால் அதுவும் செட்டப் ஆவணம் எண்டு விளங்காத, எங்கட சனத்துக்கு ஏதும் செய்யவேணும் எண்ட ஆர்வத்தில இருக்கிற ஆக்கள் இந்தக் கள்ள டாக்குத்தருக்கு காசைக் கொட்டியிருக்கினம். இந்த 2024 ஆம் ஆண்டில மட்டும் ஆளின்ர எக்கவுண்டுக்கு 8 கோடி ரூபா வந்திருக்கு. ஆனால் உந்தச் சுத்தல்காரன் பிடிபடேக்க, எக்கவுண்டில 3 கோடி ரூபாதான் இருந்திருக்கு. இந்த அஞ்சு மாதத்துக்க ஆள் 5 கோடியைச் சிலவழிச்சிருக்கு. ஆத்தில வாற தண்ணிதானே, அண்ணை குடி, தம்பி குடி எண்ட கணக்கில காசை விசுக்கித் தள்ளியிருக்கிறார் உந்தக் கள்ள டாக்குத்தர்.**

**ஆள் பொலிஸிட்ட மாட்டுப்படேக்க அவரின்ர கையில ஏழரைப் பவுண் நகை, 5 போன், ஒண்டரைக்கோடி ரூபா பெறுமதியான பெரிய கார், கைச்செலவுக்கு வைச்சிருந்த காசு எண்டதெல்லாம் இருந்ததாம். அவர் கைச்செலவுக்கு எவ்வளவு வைச்சிருந்திருப்பார் எண்டு சொல்லுங்கோ பாப்பம்? அஞ்சு லட்சமாம். கைச்செலவுக்கே அஞ்சு லட்சம் எண்டால், பெருஞ்செலவுக்கு எப்பிடிக் காசை அள்ளி இறைச்சிருப்பார் எண்டு நினைச்சுப் பாருங்கோவன். வெளிநாட்டில இருக்கிறவைக்கு தானொரு டாக்குத்தர் எண்டு நம்பப்பண்ணுறதுக்காக, சுன்னாகத்தில ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து, அங்க கிளினிக் நடக்குது எண்டு போர்ட் எல்லாம் போட்டவராம். பிறகு அந்த வீட்டையும் ஆள் ஆட்டையைப் போடப் பாத்திருக்குது. நல்லகாலமா பொலிஸ் பிடிச்சதால அந்த வீடு தப்பிட்டுதாம். இதைவிட வேற சில காணியளையும், உருட்டிப் பிரட்டி கள்ள உறுதியள் முடிச்சும் கள்ள டாக்குத்தர் வித்திருக்கிறார். டாக்குத்தர் வேலையைவிட மற்ற எல்லா வேலையளையும் ஆள் செய்திருக்கு போல. டாக்குத்தர் வேலை தெரிஞ்சாத்தானே செய்ய?**

**அதைவிட தானொரு டாக்குத்தர் எண்டு அவர் செய்து வைச்சிருந்த 'ஐடெண்டி கார்ட்' பாக்கவே அது டுப்ளிகேட் எண்டு வடிவாத் தெரியுது. ஆரோ புதிசா கொம்பியூட்டர் பழகின ஆள், செய்யத் தெரியாமல் செய்த அந்த ஐடெண்டி கார்ட்டையே கண்டுபிடிக்க ஏலாமல், கோடிக்கணக்கில காசைக் குடுத்திட்டு, பேந்து 'ஏமாத்திட்டான்' எண்டு, அழுகிறவையிலதான் முழுப்பிழை. முதல்ல ஒருத்தன் உதவி கேட்டால் அவன் சரியான ஆளோ எண்டு ஒண்டுக்கு பத்துத்தரம் செக் பண்ணிப்போட்டு குடுங்கோ. இல்லாட்டி உங்கட தலையில ஏறி எல்லாரும் மிளகாய் அரைச்சுப் போட்டு போடுவினம்.**



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேபாளத்தை வீழ்த்தியது நெதர்லாந்து

ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் 7 ஆவது ஆட்டத்தில் நெதர்லாந்து அணி நேபாள அணியை 6 விக்கெட்டுகளால் வீழ்த்தியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நெதர்லாந்து அணி முதலில் களத் தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நேபாள அணி 19:2 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து விக்கெட்டுக ளையும் இழந்து 106 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து அணி 18:4 பந்துப்பரிமாற்றங்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 109 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. (ஏ)







# மழையால் ஆட்டம் நிறுத்தம்

ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் 6 ஆவது ஆட்டத்தில் இங்கிலாந்து மற்றும் ஸ்கொட்லாந்து அணிகள் களமிறங்கியிருந்த நிலையில், ஆட்டம் மழை காரணமாகக் கைவிடப்பட்டது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஸ்கொட்லாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அபாரமாகத் துடுப்பெடுத்தாடிய ஸ்கொட்லாந்து அணி 10 பந்துப்பரி மாற்றங்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி 90 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது மழை குறுக்கிட்டது. தொடர்ந்தும் மழை பெய்துகொண்டிருந்ததால் ஆட்டம் கைவிடப்பட்டது. (ஏ)

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 12ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

உற்சவத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 21ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன என ஆலய பரிபாலனசபையினர் தெரிவித்தனர். (ச-17)

# பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜூன் 6

நவாலி வழுக்கையாறு இந்து மயான வைரவருக்கு பொங்கல் விழாவும் ஆலோசனைக் கூட்டமும் எதிர்வரும் 9ஆம் திகதி காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளன என்று ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ச)

# விபத்தில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

பருத்தித்துறை நீர்வேலி தெற்கு வில்லுமதவடியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

வீதியோரமாக நின்ற கார் ஒன்றுடன் வேகமாக வந்த ஓட்டோ மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

ஓட்டோவைச் செலுத்தி வந்தவரே விபத்தில் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ச-17)



# ஹொக்கியில் கிண்ணம் வென்றது ஓல்ட் கோல்ட்ஸின் 'கோல்ட்ஸ்' அணி

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ்.மாவட்ட ஹொக்கிச் சங்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட, மகேஸ்வரன் வெற்றிக்கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில் கோல்ட்ஸ் அணி சம்பியனானது.

சுழிபுரம் விக்ரோறியா பாடசாலை மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் ஓல்ட் கோல்ட் விளையாட்டுக்கழகத்தின் கோல்ட்ஸ் அணிக்கு எதிராகக் களமிறங்கியது ஓல்ட் கோல்ட் விளையாட்டுக் கழகத்தின் கிறிம்ஸன் அணி. ஆட்டம் ஆரம்பமாகி முதல் 30 நிமிடங்களில் இரு அணிகளும் கோல்கள் எதுவும் பெறவில்லை.

தொடர்ந்து 23 ஆவது நிமிடங்களில், கோல்ட்ஸ் அணி வீரன் கௌசிகன் 1 கோலைப் பெற்றார்.

கிறிம்ஸன் அணியானது எதிரணியைத் தோற்கடிக்க முயன்ற அடுத்து 28 ஆவது நிமிடங்களில் 1 கோலைப் பெற்றுக் கொண்டு, இரு அணிகளும் 1:1 என்ற விகிதத்தில் சம நிலையில் இருந்த நிலையில், அணிகள் இரண்டிற்கும் ரை பிறேக் கொடுக்கப்பட்டது. ஆட்டத்தைத் தொடர்ந்த அணிகள், மீண்டும் 3:3 என்ற சம கோல்களைப் பெற்றுக்கொண்டன. பின்னர் ஆட்ட முடிவில், கிறிம்ஸன் அணியை விட மேலதிகமாக ஒருகோலைப் பெற்று, 5:4 எனும் கோல் கணக்கில் கோல்ட்ஸ் அணி வெற்றிக் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது. (ப)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சுறுசுறுப்பாகவும் பரபரப்பாகவும் காணப்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாக முடியும். வீண்செலவுகள் ஏற்படும். முருகப்பெருமானை வழிபடுவது நன்று. அதிருப்திக்கு ஆளாக நேரிடும்.

**இடபம்:** மனதில் தேவையற்ற சின்னச் சின்னக் குழப்பங்கள் தோன்றி மறையும். புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். தெய்வப்பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு ஏற்படும். திடீர்ச் செலவுகளும் ஏற்படும்.

**மிதுனம்:** உற்சாகமாக இருப்பீர்கள். மனதில் சாதிக்கவேண்டும் என்ற எண்ணம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் செயற்படுவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அலைச்சலும் செலவுகளும் ஏற்படும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். சுபநிகழ்ச்சிகளுக்கான பேச்சு சாதகமாக முடியும்.

**சிம்மம்:** செயல்கள் அனைத்தையும் சிந்தித்து செயற்படவேண்டிய நாள். மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அனுசரித்துச் செல்வது நல்லது. வீண்செலவுகளால் கையிருப்பு கரையும். சிலருக்குக் கடன் வாங்கவும் நேரிடும்.

**கன்னி:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாகும். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. விற்பனையும் லாபமும் குறைவாகவே இருக்கும்.

**துலாம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். முக்கியமான முடிவு எடுப்பதில் அவசரம் வேண்டாம். கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. நண்பர்கள் பணம் கேட்டு வருவார்கள்.

**விருச்சிகம்:** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும். பணவரவுடன் திடீர்ச் செலவுகளும் ஏற்படக்கூடும்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. விற்பனையும் லாபமும் கூடுதலாகக் கிடைக்கும்.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். தந்தையின் உடல் ஆரோக்கியம் மேம்படும். செலவுகள் ஏற்பட்டாலும் அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். காரியங்கள் இழுபறியாகும். செலவுகளைச் சமாளிக்க நேரிடும்.

**கும்பம்:** பணவரவு அதிகரிக்கும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்படும். பாதிப்பு எதுவும் இருக்காது.

**மீனம்:** அனுகூலமான நாள். தந்தைவழி உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். வீண் செலவுகள் ஏற்படக்கூடும். எதிர்பாராத இலாபம் கிடைக்கும். சிவபெருமானை வழிபடுவது நன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இந்தியத் தேர்தல் முடிவுகள் இலங்கைக்கு சொல்லும் பாடம்

இந்தியாவில் நாடாளுமன்றத் தேர்தல் நடந்து முடிந்திருக்கின்றது. ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியே மூன்றாவது முறையாகவும் ஆட்சி அமைக்க இருக்கின்றது. இந்திய வரலாற்றில் ஜவஹலால் நேருவுக்குப் பின்னர் மூன்றாவது தடவையும் பிரதமராகும் வாய்ப்பு மோடிக்கு கிடைத்திருக்கின்றது. இது பாரதிய ஜனதாக் கட்சியையும், பிரதமர் மோடியையும் பொறுத்த வரையில் வெற்றி என்று சொல்லிக் கொண்டாட முடியாதளவுக்கு களநிலை அமைந்திருக்கிறது. பாரதிய ஜனதாக் கட்சி, கூட்டணிக் கட்சிகளின் ஆதரவின்றி ஆட்சியமைக்கும் எனவும் 543 ஆசனங்களில் 400 ஆசனங்களை இலகுவாகப் பெற்றுக்கொள்ளும் எனவும் சொல்லப்பட்ட நிலையில் தேர்தல் முடிவுகள் அதற்கு நேர்மாறாகவே வந்திருக்கின்றன. பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சி அமைப்பதற்கு பங்காளிக் கட்சிகளின் தயவில் தங்கியிருக்கவேண்டியிருக்கின்றது.

240 ஆசனங்களையே அந்தக் கட்சியால் தனித்துப் பெற முடிந்திருக்கின்றது. கூட்டணிகளின் ஆதரவுடன் 293 ஆசனங்களைப் பெற்றிருக்கின்றார்கள். மறுபுறம் காங்கிரஸ் கட்சி பாதாளத்திலிருந்து உச்சத்தைத் தொட்டிருக்கின்றது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சியாக வருவதற்குக்கூட முடியாதிருந்த நிலையில் இம்முறை பலமான எதிரணியாக வந்திருக்கின்றது. இந்தியாவின் தேர்தல் தொடர்பான கருத்துக் கணிப்புகள், தேர்தலுக்குப் பிந்திய கருத்துக்கணிப்புகள் எல்லாம் தேர்தல் முடிவுகளால் பொய்யாகியிருக்கின்றன. இந்தத் தேர்தலில் தமிழகத்தில் பாரதிய ஜனதாக் கட்சியின் கூட்டணிகளால் ஒரு தொகுதியைக்கூட வெல்லமுடியவில்லை. தி.மு.க. சகல தொகுதிகளிலும் வெற்றி பெற்றிருக்கின்றது. தமிழகம் மோடியை ரசிக்கவில்லை என்பதை துலாம்பரமாக எடுத்துக்காட்டுகின்றன இந்த முடிவுகள். கடந்த காலங்களைப்போன்று மோடியின் ஆட்சி இனி இருக்கும் என எதிர்பார்க்கமுடியாது. பலரின் தயவில் அவர் ஆட்சியை நடத்துவதால் கொஞ்சம் அடங்கிப் போக வேண்டியே இருக்கும். இந்திய மக்கள் தெளிவாகத் தங்கள் முடிவுகளைச் சொல்லியிருக்கின்றனர். இது மோடிக்கான கடைசி வாய்ப்பு என்பதை அவர்கள் வாக்குகளால் சொல்லியிருக்கின்றனர். இனியும் மதவாதத்தை வைத்து அரசியல் செய்யலாம் என்ற நினைப்பில் அவர்கள் குட்டுப்போட்டிருக்கின்றனர். இது இலங்கை ஆட்சியாளர்களுக்கும் தெளிவான செய்தியைச் சொல்லியிருக்கின்றது. இலங்கையும் எப்போதும் தேர்தல் அறுவடைக்காக இனவாதத்தையும், மதவாதத்தையும் தூண்டி விடுவது வழமை. கோத்தாபய ராஜபக்ச அதை வைத்தே ஆட்சியைப் பிடித்தார். தொடர்ந்து வந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் அதை முதலீட்டாக மாற்றியது மாத்திரமல்லாது, சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவில்லாது தனிப் பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். அப்போதுதான் சிறுபான்மைக் கட்சிகளின் கோரிக்கைகளை செவிமடுக்கத்தேவையில்லை என்றும் கூறியிருந்தார். ஆனால் அவரால் இரண்டரை ஆண்டுகளுக்குக்கூட ஆட்சியில் தாக்குப்பிடிக்க முடியவில்லை. எந்தச் சிங்கள மக்களால் அரியணை ஏறினாரோ அவர்களாலேயே விரட்டப்பட்டிருந்தார்.

இலங்கையிலும் ஜனாதிபதித் தேர்தல் இன்னும் சில மாதங்களில் நடக்கவிருக்கின்றது. வழமைபோன்று இம்முறையும் இனவாதத்தை கையிலெடுப்பதற்கு சகல கடும்போக்குவாதிகளும் ஒன்றாகியிருக்கின்றனர். எனவே முன்னரைப்போன்று இதுவரையும் இனவாதத்தை பகிரங்கமாக கொட்டாத ரணில், சஜித், அநுர மூவரும் இனிப் போட்டிபோட்டுக் கொண்டு அதைக் கொட்டக் கூடும். தென்னிலங்கையின் வாக்குவங்கி இனவாதக் கூட்டணியை நோக்கி சரியத்தொடங்கினால் அதைத் தம்பக்கம் இழுக்க இவர்கள் மூவரும் அதற்கு மேலால் இனவாதத்தை விதைக்கவேண்டியிருக்கும். இந்திய மக்களைப்போன்று தென்னிலங்கை சிங்கள மக்களும் இனவாத அரசியல் சகதிக்குள்ளிருந்து வெளியில் வரவேண்டும். அடுத்த தலைமுறையாவது அரசியல்வாதிகளின் வாக்குவங்கிக்காக இனவாத நெருப்புக்குள் பலியாகாமல் இருக்கவேண்டும். இந்தியத் தேர்தல் முடிவுகளை, தென்னிலங்கை சிங்கள மக்கள் பாடமாக எடுத்துக்கொண்டால் நல்லம்.



# அரசவாகனங்கள் மாயம் விசாரணைகள் ஆரம்பம்

**கொழும்பு, ஜூன் 6**

**காணாமற்போன அரசுக்குச் சொந்தமான வாகனங்கள் மற்றும் வாகனங்களை அடையாளம் காண்பதற்காக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என்று மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிசாந்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.**

காணாமற்போனதாகக் கூறப்படும் கோடிக்கணக்கான மதிப்புள்ள 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரசுக்குச் சொந்தமான வாகனங்களை கண்டுபிடிப்பதன் அவசியத்தை தேசிய கணக்காய்வு அலுவலகம் அண்மையில் வலியுறுத்தியது.

ஜனாதிபதி செயலகத்துக்குச் சொந்தமான பல வாகனங்களும் காணாமற்போன வாகனங்களாக இனங்காணப்பட்டுள்ளன. மேலும் சுகாதார அமைச்சுக்குச் சொந்தமான 679 கார்கள் மற்றும் ஆயிரத்து 115 மோட்டார் சைக்கிள்கள் உட்பட ஆயிரத்து 794 வாகனங்கள் காணாமற்போயுள்ளன.

இது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு விரைவில் அறிவிக்கப்படும் என்றும் வீரசிங்க குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# சீரற்ற காலநிலையால் நோய்கள் பரவும் அபாயம்

கொழும்பு, ஜூன் 6

சீரற்ற காலநிலை காரணமாக நாடளாவிய ரீதியில் பல்வேறு நோய்கள் பரவும் நிலைமை உள்ளது என்று சிறுவர் மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா எச்சரித்துள்ளார்.

வயிற்றுப்போக்கு மற்றும் வைரஸ் காய்ச்சல் போன்றன பரவும் அபாயம் அதிகரித்துள்ளது என்றும், காய்ச்சலின் அறிகுறிகளாக வாந்தி, அஜீரணம், வயிற்றுவலி என்பன காணப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## இணையம் செயலிழப்பு மக்கள் அந்தரிப்பு

கொழும்பு, ஜூன் 6

கொழும்பு பத்திரமுல்லவில் உள்ள இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத் தரவுத் தொடர்பு செயலிழந்ததால் பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழை வழங்கும் ஒரு நாள் சேவையில் சுமார் 2 மணிநேரம் தாமதம் ஏற்பட்டது.

பல்வேறு இடங்களில் இருந்து வந்திருந்த 500க்கும் மேற்பட்டவர்கள் இதனால் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

சுமார் 2 மணி நேரத்தின் பின்னர் இணையத் தரவுத் தொடர்பு வழமைக்குத் திரும்பியது. (எ-125)

## விவசாயிகளுக்கு பரசூட் மானியம்

4000 விவசாயிகளுக்கு 40 இலட்சம் ரூபா பெறுமதியான பரசூட் தட்டுகள் 25 வீத மானியத்தின் கீழ் வழங்கப்படவுள்ளன.

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவின் ஆலோசனைக்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

புதிய விவசாய தொழில்நுட்பத்தை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தும் திட்டத்தின் கீழ், இந்த பரசூட் தட்டுகளை பயன்படுத்தும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

## புதிய சின்னம் ரணில் திட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் யானை, மொட்டு மற்றும் அன்னம் அல்லாத பொதுவானதொரு சின்னத்தில் களமிறங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டுள்ளார்.

இதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன என்று அரசியல் தகவல்கள் தெரிவித்துள்ளன.

அதன்படி ஜனாதிபதித் தேர்தலில் தான் களமிறங்கும் அறிவிப்பை எதிர்வரும் 9 ஆம் திகதி வெளியிட ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார் என்றும் கூட்டணி, சின்னம் உள்ளிட்ட விடயங்களைக் கையாளும் அதிகாரம் ஜனாதிபதிக்கு நெருக்கமான சட்டத்தரணிகள் குழுவிடம் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-44)

## நாளை

07.06.2024
வெள்ளிக்கிழமை
வைகாசி - 25
சுபநேரம் : 05.52 - 07.22
ராகுகாலம் : 10.22 - 11.52

## நாளொரு நல்வார்த்தை

**தொழில் எத்தனை கடினமானதென்றாலும் அதைச் செய்வதில் அவமானம் ஒன்றும் இல்லை. சோம்பேறியாகத் திரிவதுதான் அவமானம்.**

**-லியோ டால்ஸ்டாய்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருதி வங்கி திறப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 6

சாவகச்சேரி ஆதார மருத்துவ மனையில், குருதி மாற்று சேவை பணிப்பாளர் மருத்துவர் லக்ஷ்மன் எதிரிசிங்கவால் தேசிய குருதி வங்கிப்பிரிவு, நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது. (ப)

## கேள்வி அறிவித்தல்
### யாழ்ப்பாணம் மாநகரசபை

### திரவக்கழிவகற்றல் சேவை 2024/2025

யாழ் மாநகரசபை ஆளுகைக்குட்பட்ட இடங்களில் திரவக்கழிவகற்றல் வாகனத்தினை வாடகைக்கு அமர்த்துவதற்காக ஒரு வருட காலத்திற்கு சேவை வழங்குனரிடமிருந்து யாழ் மாநகர சபை பெறுகைக்குழு தலைவரால் கேள்விகள் கோரப்படுகின்றன. சேவை வழங்குநர்கள் சேவை நிபந்தனைகள் மற்றும் கேள்விப் படிவங்களை யாழ் மாநகர சபையின் பொதுச் சுகாதாரப் பொறியியல் பிரிவில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

கேள்விப் படிவங்களை 07.06.2024 தொடக்கம் அலுவலக நேரத்தில் பிற்பகல் 3.00 மணி வரைக்கும் 20.06.2024 திகதி நண்பகல் 12.00 மணிவரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் படிவங்களை 20.06.2024 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னர் தலைவர், பெறுகைக்குழு, மாநகரசபை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது ஆணையாளர் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியினுள் இடுதல் மூலமாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாக கிடைக்கப்பெறும் கேள்விப்படிவங்கள் கேள்விச்சபையால் நிராகரிக்கப்படும்.

கேள்வி திறத்தல் 20.06.2024 ஆம் திகதி பி.ப. 02.00 மணிக்கு கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கேள்விச்சபையின் தீர்மானமே இறுதியானது.

தலைவர், பெறுகைக்குழு,
யாழ் மாநகரசபை. 06.06.2024

(CR 42580) A-1

## கேள்வி அறிவித்தல்
### யாழ்ப்பாணம் மாநகரசபை

### வியாபார நிலையங்களில் கட்டணக்கழிவகற்றல் சேவை-2024/2025

யாழ். மாநகரசபை ஆளுகைக்குட்பட்ட இருநூற்றைம்பதுக்கும் (250) அதிகமான தனியார் கடைகள், விடுதிகள் ஆகியவற்றிலிருந்து தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளை (உணவுக் கழிவுகள், உக்கக்கூடியவை, பொலித்தீன், பிளாஸ்ரிக், கண்ணாடி) மக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மூடிய வாகனத்தில் பாதுகாப்பான முறையில் அகற்றி காக்கைதீவு மற்றும் கல்லுண்டாயில் அமைந்திருக்கும் கழிவு சேர் நிலையத்திற்கு கொண்டு சென்று கழிவகற்றுவதற்கு கட்டண கழிவகற்றல் சேவை ஒப்பந்தமொன்றை மேற்கொள்ள ஒரு வருட காலத்திற்கு சேவை வழங்குநரிடமிருந்து யாழ். மாநகர சபை பெறுகைக்குழு தலைவரால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சேவை வழங்குநர்கள் விண்ணப்ப படிவங்களையும் சேவை நிபந்தனைகளையும் யாழ் மாநகரசபையின் பொதுச் சுகாதாரப் பொறியியல் பிரிவில் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

கேள்விப் படிவங்களை 07.06.2024 தொடக்கம் அலுவலக நேரத்தில் பிற்பகல் 3.00 மணி வரைக்கும் 20.06.2024 திகதி நண்பகல் 12.00 மணிவரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் படிவங்களை 20.06.2024 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் தலைவர், பெறுகைக்குழு, மாநகரசபை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது ஆணையாளர் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியினுள் இடுதல் மூலமாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாக கிடைக்கப்பெறும் கேள்விப்படிவங்கள் கேள்விச் சபையால் நிராகரிக்கப்படும்.

சித்திகர கேள்விதாரர் ஒப்பந்தம் கைச்சாத்திடும்போது மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணமாக ரூபா 100,000.00 பணமாக செலுத்துதல் வேண்டும்.

கேள்வி திறத்தல் 20.06.2024ம் திகதி பி.ப. 3.00 மணிக்கு கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் இடம்பெறும். கேள்விச்சபையின் தீர்மானமே இறுதியானது

தலைவர்,
பெறுகைக்குழு,
யாழ் மாநகரசபை. 06.06.2024

(CR 42579) A-1

# மரண அறிவித்தல்

## செல்லத்துரை சிவராசா

பிறப்பு
24.05.1950

இறப்பு
05.06.2024



யாழ்ப்பாணம் மந்திகையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சிவராசா நேற்று (05.06.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற காளியப்பு - இராசம்மா தம்பதியரின் மருமகனும் தேவிகாராணியின் அன்புக் கணவரும் சங்கீதா (கனடா), சிந்துஜா (லண்டன்) சுகனியா, கிருஷிகேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சீராளன், பக்தரன், வாசன் ஆகியோரின் அன்பு மாமனாரும் துஷாந், சிஷாந், தன்ஷிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.06.2024) வியாழக்கிழமை காலை அன்னாரில் இல்லத்தில் 8 மணியளவில் ஆரம்பமாகி 10 மணிக்கு ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெருந்தெரு,
புலோலி கிழக்கு,
புலோலி.

தகவல்:
குடும்பத்தினர்
077 5251249

(CS 28002) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் (வ-து)

## விண்ணப்பம் கோரல்

சங்கத்தினால் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகிறது. சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பபடிவத்தினை 20/= செலுத்தி பெற்று பூரணப்படுத்தி பிறப்புச்சான்றிதழ், கல்வித்தகைமைச் சான்றிதழ் பிரதிகளுடன் 20.06.2024ம் திகதிக்கு முன்பாக விண்ணப்பங்களை **தலைவர், சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்(வ-து), சாவகச்சேரி,** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பபடிவத்தின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப் பட்டிருத்தல் வேண்டும்.

பதவி : வர்த்தக முகாமையாளர்.
சம்பள குறியீட்டு இல : 106/08( சுற்.நிரு இல: 01/2021)
சம்பள அளவுத்திட்டம் : ரூபா20665–260x10-280x10-ரூபா26065(சு.நிஇல: 02x2022)
இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றறிக்கை 02/2022ற்கு அமைய படிகளும் ரூபா.15000/= மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும்.

**தகைமைகள்:**

அ) கூட்டுறவு ஊழியர் 9 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் இதனோடொத்த களத்தில் முகாமை / மேற்பார்வை நிலைப்பதவியொன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம். / கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத்திட்டத்தில் இதனோடொத்த களத்தில் முகாமை / மேற்பார்வை நிலைப்பதவியொன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

**அல்லது**

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப்பட்டம் / அதற்கு சமனானதகைமை. இத் தகைமையானது கணக்கியல், வியாபாரப் புள்ளிவிபரவியல் மற்றும் வியாபாரக் கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும் / இலங்கைத் தொழில் நுட்பக்கல்லூரியின் கணக்கியல் / முகாமைத்துவம் /வர்த்தகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா சித்தி.

**அல்லது**

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் சந்தைப்படுத்தல் / பொருள் விநியோகமும் பங்கீடும் / பொருள் இறக்குமதியும் ஏற்றுமதியும் ஆகிய பிரிவுகளில் ஒன்றில் / அதற்கு மேற்பட்ட பிரிவுகளில் முகாமை / மேற்பார்வை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம். / க.பொ.த. உயர்தரப்பத்திரப் பரீட்சையில் வர்த்தகம் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் சந்தைப்படுத்தல் / பொருள் விநியோகமும் பங்கீடும் / பொருள் இறக்குமதியும் ஏற்றுமதியும் ஆகிய பிரிவுகளில் ஒன்றில் / அதற்கு மேற்பட்ட பிரிவுகளில் முகாமை / மேற்பார்வை நிலைப்பதவியொன்றில் ஆகக்குறைந்தது 05 ஆண்டு கால அனுபவம்.

**பதவி : சாரதி**
சம்பள குறியீட்டு இல : 312/13( சுற்.நிரு இல: 01/2021)
சம்பள அளவுத்திட்டம் : ரூபா 18360–160x10-170x10- ரூபா21660 (சு.நி இல : 02/2022) இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றறிக்கை 02/2022ற்கு அமைய படிகளும் ரூபா.15000/= மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும்.

அ) 05ஆம் தர கல்விச் சான்றிதழுடன் பேருந்து /லொறி/பெட்டியுடன் கூடிய உழவு இயந்திர சாரதி அனுமதிப்பத்திரத்துடன் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்.

**பதவி : தொழிலாளி**
சம்பள குறியீட்டு இல : 318/17( சுற்.நிரு இல: 01/2021)
சம்பள அளவுத்திட்டம் : ரூபா 16515–130x10-145x10-ரூபா19265(சு.நிஇல:02/2022) இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றறிக்கை 02/2022ற்கு அமைய படிகளும் ரூபா.15000/= மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும்.

அ) 05 ஆம் தர கல்விச் சான்றிதழுடன் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்

வயது 18 தொடக்கம் 45 வரை (சங்கப்பணியாளருக்கு வயதெல்லை பொருந்தாது) சங்க எல்லைப்பரப்பினுள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். வேறு கூட்டுறவுச்சங்கங்களிலிருந்து விண்ணப்பிப்பவர்கள் தங்களின் சங்கத்தின் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும். இப்பதவிகளுக்கு விண்ணப்பம் செய்யும் விண்ணப்பதாரர்கள் தெரிவுசெய்யப்படுமிடத்து பிணை சங்கத்தில் செலுத்த தயாராக இருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம், கண்டிவீதி, சாவகச்சேரி.**
**03.06.2024**

(cr.42568) (N-1)

## 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 01 • 01 • 1936

மறைவு 07 • 05 • 2024

கடந்த 07.05.2024 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவி

### அமரர் கந்தையா விசாலாட்சி

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (06.06.2024) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும்கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரது மரணச் செய்தி கேட்டு எமது இல்லத்துக்கு வருகை தந்தும், தொலைபேசி, மின்னஞ்சல் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும், மலர்மாலைகள், மலர் வளையங்கள் சாத்தியவர்களுக்கும் பதாகைகள் வெளியிட்டவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கைதடி தென்கிழக்கு,**
**செட்டியார் வளவு, கைதடி.**

(CS/55275) J-1

**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



தோற்றம் 13 • 08 • 1966

மறைவு 04 • 06 • 2024

### செல்வராசா ராஜினி (குஞ்சு)

ஊரிக்காடு வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா ராஜினி (குஞ்சு) நேற்று முன்தினம் (04.06.2024) செவ்வாய்க்கிழமை இயற்கை எய்தினார்.


அன்னார் இராசேந்திரம் - சறோஜா தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற தியாகராசா - ஞானம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், செல்வராசாவின் (அருள் - சுவிஸ்) அன்பு மனைவியும், சாயினி (நீதிவான் நீதிமன்றம் - திருகோணமலை), தர்சிகா, சதுர்த்தியன் ஆகியோரின் அன்புத் தாயும், ரவீந்திரன் (ஜெர்மன்), மாலினி (விசி), குபேந்திரன் (பாபு), சுரேந்திரன் (சுரேன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாலசுப்பிரமணியம் (அருட்சோதி), காலஞ்சென்ற செல்வராணி (வசந்தா), காலஞ்சென்ற கமலேஸ்வரி மற்றும் இராஜேஸ்வரி (சாந்தி - ஜெர்மன்), சிவசோதி (சிவம் - வவுனியா), சிவசுப்பிரமணியம் (சிவா - ஜெர்மன்), சிவகுமாரன் (குமார் - லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2024) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் இணுவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணி அளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**மகள் - T.P. 077 552 5604**

(CS/676) J-1

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 11.05.2024 சனிக்கிழமை இறைபதம் அடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் வல்லிபுரம் சின்னத்துரை

**(Retired Assistant Superintendent of Surveyor)**

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டி கிரியைகள் நாளை (07.06.2024) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் 09.06.2024 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனை வரையும் காலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

**இந்த அழைப்பை உங்களுக்கான தனி அழைப்பாக ஏற்று இந்த நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

**குடும்பத்தினர்**

இல. 27, [illegible] வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

(cr 655) (N-1)

| | | |
|---|---|---|
| தொடர்பு: திருமதி S. விமல இந்திரா | (மனைவி | – 077 082 1584) |
| திருமதி Dr.T.. இந்திரமதி | (பெறாமகள் | – 077 707 6035) |
| திரு.வ.நாகலிங்கம் | (சகோதரன் | – 077 250 3598) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூழல் தினத்தை முன்னிட்டு நேற்று ஊர்காவற்றுறையில் கவனவீர்ப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 6

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, ஊர்காவற்றுறை கண்ணகி அம்மன் கோவில் துறைமுகப் பகுதியில் விழிப்புணர்வுப் போராட்டம் ஒன்று, நேற்று புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'மீனவர்களின் பாரம்பரிய கடற்றொழிலைப் பாதிக்கும் அட்டைப் பண்ணையை உடன் நிறுத்து, மீனவர்களின் வயிற்றில் அடிக்காதே, மீனவர்களை வாழவிடு' என்று எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊர்காவற்றுறைப் பிரதேசசபை உறுப்பினரின் ஒருங்கிணைப்பில், பொது அமைப்புகள், ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் சங்கத்தினர் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் எனப் பலர் இணைந்து போராட்டத்தை முன்னெடுத்தனர். (பு-27)

## சிவகுமாரன் நினைவுத்தூபிக்கு அஞ்சலி செலுத்திய இளைஞர்கள்



யாழ்ப்பாணம், ஜூன் 6

தியாகி பொன்.சிவகுமாரனின் 50 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு உரும்பிராய் சந்தியிலுள்ள சிலையடியில் கடைப்பிடிக்கப்பட்ட அதேவேளை, உரும்பிராய் வேம்பன் இந்துமயான வளாகத்திலுள்ள நினைவுத்தூபியில் இளைஞர்களாலும் கடைப்பிடிக்கப்பட்டது.

நேற்றுப் புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் உரும்பிராய்ச் சந்திக்கு அருகில் அமைந்துள்ள பொன்.சிவகுமாரனின் உருவச் சிலையடியில் உரும்பிராய் இளைஞர்களின் ஏற்பாட்டில் இளம் சமூகச் செயற்பாட்டாளர் ந.விஜயதரன் தலைமையில் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது. அதன் பின்னர் உரும்பிராய் வேம்பன் இந்துமயான வளாகத்தில் அமைந்துள்ள பொன்.சிவகுமாரனின் நினைவுத் தூபிக்கு மலர்மாலைகள் அணிவித்தும், நினைவுச் சுடர் ஏற்றியும் அஞ்சலித்தனர். (ஓ-66)

## வீதி மறுசீரமைப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

நூறு வருடங்களுக்கும் மேலாக மறுசீரமைக்கப்படாத அராலிச் சந்தி முதல் குறிகாட்டுவான் வரையான வீதிப் புனரமைப்புப் பணிகள் இன்று ஆரம்பமாகவுள்ளன.

நூறு வருடங்களுக்கும் மேலாகப் புனரமைக்கப்படாத யாழ். அராலிச் சந்தி தொடக்கம் வேலணை- புங்குடுதீவு ஊடாக குறிகாட்டுவான் வரையான வீதிப் புனரமைப்புப் பணிகள் இன்று வியாழக்கிழமை அடிக்கல் நடும் வைபவத்துடன் ஆரம்பமாகவுள்ளன. (ஓ-66)

## கசிப்புடன் இளைஞன் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 6

சுழிபுரத்தில் கசிப்புடன் இளைஞனை கைது செய்துள்ளதாக வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

சுழிபுரம் கிழக்கில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு விற்பனை இடம்பெறுவதாக வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் 750 மில்லி லீற்றர் கசிப்பை கைப்பற்றினர். அதேயிடத்தைச் சேர்ந்த ஒருவரை சந்தேகத்தில் கைது செய்துள்ளனர். (ஓ-125)

## இராணுவத்தினரால் அழிக்கப்பட்ட சிவகுமாரனின் சிலையில் அஞ்சலி



யாழ்ப்பாணம், ஜூன் 6

பொன். சிவகுமாரனின் 50ஆவது நினைவேந்தல் இராணுவத்தால் இடித்து அழிக்கப்பட்ட பொன்.சிவகுமாரனின் திருவுருவச்சிலையில் தமிழ்த் தேசியவாதிகளால் நேற்றுக் காலை உணர்வுபூர்வமாக அஞ்சலிக்கப்பட்டது.

வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஸ் மற்றும் அரசியல் ஆய்வாளரும் சட்டத்தரணியுமான சி.அ.யோதிலிங்கம், போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் ஈஸ்வரன், அதன் செயலாளர் தனுபன் உள்ளிட்ட பலரும்கலந்துகொண்டு அகவணக்கம் செலுத்தியதுடன் திருவுருவச் சிலைக்கு தீபமேற்றி மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். (ஓ-இ)


# INVITATION FOR BID
# PSDG - 2024
# Manthai East Pradeshiya Sabha – Pandiyankulam

1. The Chairman, Local Authority Procurement Committee on behalf of Manthai East Pradeshiya Sabha, Northern Province invites sealed bids from eligible and qualified Bidders for the works described in the table below.
2. Bidding will be conducted through National competitive bidding procedure. However, according to the public finance circular no 04/2016(ii) dated 2019.05.08 regional preference and CIDA grade preference shall apply.
3. To be eligible for contract award the successful bidders shall not have been black listed and shall have been registered in the field of Road and Building for grade mentioned in the table below with the Institute for Construction Industry Development Authority (CIDA).
4. Qualification requirements are indicated in section 4 of the bidding document. Additional details are provided in the Section 5 of the bidding document.
5. Interested bidders may obtain further information from Chairman, Procurement committeeManthai East Pradeshiyasabha.-Pandiyankulam (Te.No-021 228 3475, Fax No-021 228 3476) and inspect the bidding documents at the address given below from any working days 9.00 hrs to 15.00 hrs from 2024.06.06 till 2024.06.25
6. A complete set of Bid Documents in English language may be purchased by interested Bidders on the submission of a written application to the Manthai East Pradeshiyasabha. From 2024.06.06 until 2024.06.25 from 09.00 hrs to 15.00 hrs. Upon payment of a non-refundable fee of Rs.2,000.00. The method of payment will be by cash.
7. Bids shall be delivered of Original and duplicate to the address Secretary,Manthai East Pradeshiyasabha on or before 14.00 hrs on 2024.06.26 Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders or their representatives who choose to attend.

| S.No | Contract No | Description of Work | Source of Fund | Estimated Civil Cost (Million) | Contract Period | Required Grade | Required Bid Security | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Bid Validity Days | Bid Validity Period | Security amount | Security Validity Period |
| 01 | NP/14/44/(02)/02 /PSDG/2024/01 | Construction of Panankamam Salampan Road (Stage II) | PSDG | 2.54 | 84 Days | C8 and C7 | 63Days | 2024.08.27 | 40,000.00 | 2024.09.24 |

Bid security is as following table

**Bid invitation table**

8. Pre bid meeting will be held on 2024.06.20 at 11.00 Hrs in Manthai East Pradeshiyasabha, Pandiyankulam. Interested bidders may attend the pre bid meeting at their own expenses.
9. The procurement committee has the power to reject the bid as totally or partly and to call retender

**Chairman,**
**Local Authority Procurement Committee**
**Manthai East PradeshiyaSabha Pandiyankulam**
**2024.06.06**

(CR/42573) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 02 . 1953



மறைவு 05 . 06 . 2024

### ருக்மணிதேவி மரியரட்ணம்

பருத்தித்துறை ஐயனார்வீதியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ருக்மணிதேவி மரியரட்ணம் அவர்கள் நேற்று (05.06.2024) புதன்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சுபத்திராதேவி தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்ற மரியரட்ணத்தின் அன்பு மனைவியும் தவமணிதேவி (முன்னாள் எழுதுவினைஞர் யாழ் பல்கலைக்கழகம்), நந்தகுமார் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், வல்லிபுரம் ஸ்ரீதரனின் (ஓய்வுநிலை சிரேஷ்ட உதவிப்பதிவாளர் யாழ் பல்கலைக்கழகம்) மைத்துனியும் அம்பிகா (சட்டத்தரணி), பிரியதர்ஷன் (சம்பத்வங்கி யாழ் பிராந்திய அலுவலகம்) ஆகியோரின் சிறியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2024) வியாழக்கிழமை மு.ப 9.00 மணியளவில் இல-22, ஆர்.சி.தேவாலய ஒழுங்கை, திருநெல்வேலி கிழக்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு.ப 11.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல-22, ஆர்.சி.தேவாலய ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
வல்லிபுரம் ஸ்ரீதரன்
(மைத்துனர்)
077 753 3596

(CS677) S-1

## வேலை ஆட்கள் தேவை

உதிரிப்பாக விற்பனை நிலையத்திற்கு கணக்காளர் (ஆண்/பெண்)

விற்பனையாளர் தேவை.

தொடர்பு:- 070 659 0123

(CS/55279) J-1


## தவறிவிட்டது

சங்கத்தானை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு நேர்த்திக்கடன் செய்யப்பட்ட ஒன்றரைப் பவுன் நிறையுடைய தங்கச் சங்கிலி 02.06.2024 அன்று சாவகச்சேரிக்கும் கொடிகாமம் நட்சத்திர மஹால் மண்டபத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:- 077 137 2915

(CR/42570) J-1

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 07.05.2024 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்.

அமரர்

### சோமசுந்தரம் பரமசிவராசா

அவர்களின் அந்தியேட்டி நிகழ்வுகள் கடந்த 04.06.2024 செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக் கிருத்திய நிகழ்வு இன்று (06.06.2024) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறுவதுடன் முற்பகல் 11.00 மணியளவில் மதியபோசன நிகழ்வு நீராவியடி இலங்கைவேந்தன் மண்டபத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அழைக்கின்றோம்.

8/1, புகையிரதத் தெற்கு வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

(CR/42571) J-1

குடும்பத்தினர்


## கற்றல் ஆரம்பம்

யாழ்., ஜூன் 6

இந்த வருடம் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான உயர்தரப் பாடசாலை வகுப்புக்கள் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை நிறைவுற்றுப் பெறுபேறுகளுக்காகக் காத்திருக்கும் மூன்று மாத காலத்தைக் கருத்திற் கொண்டே உயர்தர வகுப்புக்களை விரைவாக ஆரம்பிப்பதற்கு கல்வி அமைச்சுத் தீர்மானித்துள்ளது. (ம-66)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 19 . 03 . 1958



மறைவு 19 . 05 . 2023

அமரர் **திருநாவுக்கரசு நந்தகுமார்**

(மன்னார் கிறிம் ஹவுஸ் உரிமையாளர், மன்னார் சாந்திபுரம் முன்னாள் தலைவர்)

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கனகாலம் இருப்பீர்கள்

44, A, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி.

(CS/55287) J-1

குடும்பத்தினர்

முன்னைநாள் ஆங்கிலபாட உதவிக் கல்விப் பணிப்பாளர் தென்மராட்சி கல்வி வலயம்,
முன்னைநாள் அதிபர் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி

## 80ஆவது அகவை நிறைவுகாணும்




உயர்திரு **இராமலிங்கம் கைலைநாதன்**

அவர்கள்

அமுதவிழா காணும்
ஆங்கில ஆசானே
அன்புருவம் கொண்டவரே
ஆபத் பாந்தவரே
அதி உயர், ஹாட்லியின் மைந்தரே
ஆங்கிலம் தழைத்தோங்க
அவனியில் நீடுவாழ - இன்று
அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம்.
வாழ்க ! வாழ்க !! வாழ்க !!!

Best Wishes

தென்மராட்சியான்

(CS 42578) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவசிதம்பரத்தின் நினைவஞ்சலி



உடுப்பிட்டி சிங்கம் என வர்ணிக்கப்படும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அமரர் முருகேசு சிவசிதம்பரத்தின் 22 ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு நெல்லியடியிலும் கரவெட்டியிலும் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்றது.

நெல்லியடி நகரில் கரவெட்டி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான கேசவன் சயந்தன், ப.கஜதீபன், நெல்லியடி வர்த்தக சங்கத்தினர், பொதுமக்கள் எனப் பலர் அஞ்சலி செலுத்தினர்.

அவரின் இல்லத்தில் அமைக்கப்பட்ட திருவுருவச்சிலைக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது. அமரரின் உறவினரான சிதம்பரநாதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நெல்லியடி வர்த்தக சங்கச் செயலாளர் சுரேரஞ்சன், பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ஒ-100)

## வீடு வாடகைக்குத் தேவை

கச்சேரி, நல்லூர், திருநெல்வேலி மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை

**076 43 75 404**

## கனடா...

நிலையில், இது தொடர்பில் யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது.

இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், சந்தேகநபரைக் கைது செய்ததுடன், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக கனடாவுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து மோசடிகள் இடம்பெறுவது அதிகரித்துவருகின்றது என்றும் இது தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (அ-ம-26)

## ஜூன் 8...

வைத் தேர்தலில் 273 தொகுதி என்ற பெரும்பான்மையை எந்தக் கட்சி வெளிப்படுத்துகின்றதோ அந்தக் கட்சியே ஆட்சியமைக்கும். நேற்றுமுந்தினம் வெளியான முடிவுகளில் எந்தக் கட்சிக்கும் தனிப்பெரும்பான்மை கிட்டவில்லை. பா.ஜ.க.வால் 240 தொகுதிகளிலேயே வெற்றிபெற முடிந்த நிலையில், கூட்டணி அமைத்து ஆட்சியமைப்பதை பா.ஜ.க. உறுதிப்படுத்தியுள்ளது.

இதையடுத்து, இந்தியாவின் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவை நேற்று நண்பகல் சந்தித்த மோடி, 17ஆவது மக்களவையைக் கலைக்கும் முடிவையும், தனது பதவி விலகல் தீர்மானத்தையும் (மீண்டும் பிரதமராகுவதற்காக) குடியரசுத் தலைவரிடம் கையளித்தார். அவற்றை குடியரசுத் தலைவர் ஏற்றுக்கொண்டார். புதிய அரசாங்கம் அமையும் வரையில் மோடியை காபந்து பிரதமராகச் செயற்படும்படியும் முர்மு கேட்டுக்கொண்டார். அதை மோடியும் ஏற்றுக்கொண்டார். (அ-ம)

ஓம் சக்தி

நயினாதீவு

# ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயில் 2024 குரோதி வருட உயர் திருவிழா



| | | | |
|---|---|---|---|
| 07.06.2024 | வெள்ளிக்கிழமை | 1 ஆம் திருவிழா | கொடியேற்றம் நண்பகல் 12.00 மணி |
| 11.06.2024 | செவ்வாய்க்கிழமை | 5 ஆம் திருவிழா | பகல் குடைத் திருவிழா, இரவு முத்துச்சப்பரம் |
| 13.06.2024 | வியாழக்கிழமை | 7 ஆம் திருவிழா | இரவு கைலைக்காட்சி |
| 16.06.2024 | ஞாயிற்றுக்கிழமை | 10 ஆம் திருவிழா | பகல் கைலைக் காட்சி, இரவு திருமஞ்சம் |
| 17.06.2024 | திங்கட்கிழமை | 11 ஆம் திருவிழா | பகல் விசேட கருட, சர்ப்ப பூசையுடன் வாயு பட்சணி நாகம் திருவீதி உலா இரவு பூந்தண்டிகை |
| 19.06.2024 | புதன்கிழமை | 13 ஆம் திருவிழா | பகல் சிவபூசைக் கைலைக்காட்சி, இரவு சப்பரம் |
| 20.06.2024 | வியாழக்கிழமை | 14 ஆம் திருவிழா | பகல் இரதோற்சவம், பிற்பகல் பச்சை சாத்துதல், இரவு அம்பாள் தேரடி தரிசனம் |
| 21.06.2024 | வெள்ளிக்கிழமை | 15 ஆம் திருவிழா | பகல் கங்காதரணியில் தீர்த்தோற்சவம், இரவு திருவூஞ்சல், கொடியிறக்கம் |
| 22.06.2024 | சனிக்கிழமை | 16 ஆம் திருவிழா | தெப்போற்சவம் (பூங்காவனம்) |

ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு.

அன்னையின் அருள் பெற அடியார்கள் அனைவரும் வருக.

அறங்காவலர் சபை
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்
நயினாதீவு.

(cr.42569) (N-1)

# கேள்விஅறிவித்தல்
# கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு
# PSDG/சபைநிதி 2024

1. கரைதுறைப்பற்று பிரதேசசபையானது, PSDG/சபை நிதியினை கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களிற்காக பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

2. **தலைவர், பெறுகைக்குழு, கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு, வடமாகாணம்,** தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.

3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

4. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி, கட்டுமானம் மற்றும் கட்டிட நிர்மாண துறையில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

5. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு.** தொலைபேசி:-024-3243542 தெலைநகல்: 0212290001இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் 06.06.2024ம் திகதியிலிருந்து 26.06.2024 வரை காலை 09.00 மணிமுதல் மாலை 02.30 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு எனும் இடத்திலிருந்து 06.06.2024ம் திக்தியிலிருந்து 26.06.2024 வரை வேலை நாட்களில் காலை 09.00 மணிக்கும் மாலை 02.30 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

8. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு** எனும் முகவரிக்கு 27.06.2024ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படவேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

9. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து PSDG/NP/MU/MPPS/2024/01, NP/14/44(01)/02/03/DE.RE/Capital/01/2024/01/2024-2024 -77(எழுபத்தேழ–10.09.2024)நாட்கள், PSDG/NP/MU/MPPS/2024/04-2024-63(அறுபத்துமூன்று–27.08.2024)நாட்கள். NP/14/44(01)/02/03/C.F/Maintence/ 01/2024 - 49(நாற்பத்தொன்பது–13.08.2024)நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.

10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (Mn) (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை: பிணை வைப்பு(Rs) | வேண்டப்படும் கேள்விப் பிணை: செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | PSDG/NP/MU/MPPS/2024/01 | Construction of Peruntheru Road | 5.932 | 77 நாட்கள் | C7 & C6 வீதி | 60000.00 | 8/oct/2024 |
| 2 | NP/14/44(01)/02/03/DE.RE/Capital/01/2024/01/2024 | Construction of Local Product Sales Center (uUIT A at Thannirutu Market | 7.627 | 77 நாட்கள் | C7 & C6 கட்டடம் | 77000.00 | 8/oct/2024 |
| 3 | PSDG/NP/MU/MPPS/2024/04 | Renovation of Kallappadu Main Road | 3.389 | 63 நாட்கள் | C8 & C7 வீதி | 34000.00 | 24/sep/2024 |
| 4 | NP/14/44(01)/02/03/C.F/Maintence/01/2024 | Renovation of Mullaitivu Market Mutton Stole At Mullaitivu Town | 0.656 | 49 நாட்கள் | C9 & C8 கட்டடம் | 7000.00 | 10/sep/2024 |

11. கேள்விகோரல் பற்றிய முன்னோடிக் கூட்டம் 20.06.2024 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு அலுவலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளமுடியும்.

12. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.


**தலைவர்,**
**உள்ளூர் அதிகார பெறுகைச்சபை,**
**கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு.**
**06.06.2024**

(cr.42572 (N-1)

# மரண அறிவித்தல்

தோற்றம்
16 . 09 . 1981

மறைவு
05 . 06 . 2024



## அமரர் குணரத்தினம் தர்மகுலராஜா (ரமேஸ்)

பலாலி கிழக்கை பிறப்பிடமாகவும் அளவெட்டி தெற்கை வதிவிடமாகவும் கொண்ட குணரத்தினம் தர்மகுலராஜா (ரமேஸ்) நேற்று (05.06.2024) புதன்கிழமை மதியம் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் இராசநாயகியின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான யோகநாதன் - புஸ்பராணியின் அன்பு மருமகனும், குமுதாவின் ஆருயிர்க் கணவரும் தோழீசன், சுலக்ஷன் (மகாஜனாக் கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கோகுலராஜாவின் (கோகுலன்) அன்புச் சகோதரனும் சனுஜாவின் மைத்துனரும், சனுஸ்கா, நவநீதன், ஆகியோரின் பாசமிகு சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2024) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கீரிமலை செம்பொன்வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு :**
**மனைவி : 076 001 5424**
**மகன் : 074 038 0329**

நேரலை முகவரி
K digital

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுவேட்பாளருக்கு...

குடிமக்கள் சமூகக் கூட்டிணைவின் வவுனியாத் தீர்மானத்தின் தொடர்ச்சியாக இரண்டாவது பொதுச்சபைக் கூட்டம் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியொன்றில் நேற்று இடம்பெற்றது. இதுவரை வடக்கு - கிழக்கு சிவில் அமைப்புகளின் கூட்டிணைவு என்று அழைக்கப்பட்ட தமிழ் குடிமக்கள் சமூகத்தின் கட்டமைப்பை இனிமேல், 'தமிழ் மக்கள் பொதுச்சபை' என அழைப்பது என்றும் இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தலுக்கான தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயத்தில் அரசியல் கட்சிகள் தங்கள் முடிவுகளை உத்தியோகபூர்வமாக அறிவித்து முடித்தவுடன் பரஸ்பர புரிந்துணர்வு அடிப்படையில் ஒரு பொதுக்கட்டமைப்பை உருவாக்கிச் செயற்படுவது என்றும் ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டது.

அத்துடன் தமிழ் மக்கள் பொதுச்சபைக்கான 9 உறுப்பினர்களைக் கொண்ட வழிகாட்டல் குழுவும் 25 பேரை உள்ளடக்கிய தலைமை ஒருங்கிணைப்புக் குழுவும் கலந்துரையாடலின்போது தெரிவுசெய்யப்பட்டுள்ளது. தலைமை ஒருங்கிணைப்புக் குழுவில் இருந்து தமிழ் மக்கள் சபைக்குரிய செயற்குழுக்கள் தெரிவுசெய்யப்படும் என்றும் தொடர்ச்சியாக ஒவ்வொரு மாதத்தின் இறுதி சனிக்கிழமைகளில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தமிழ் மக்கள் பொதுச்சபை கூடி, தேவையான முடிவுகளை எடுக்கும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி பேரியக்க ஒருங்கிணைப்பாளர் வேலன் சுவாமிகள், இணை ஒருங்கிணைப்பாளர் சீலன், அரசியல் ஆய்வாளர் சட்டத்தரணி சி. அ. யோதிலிங்கம், பேராசிரியர் கே.ரீ.கணேசலிங்கம், பொருளியல் ஆய்வாளர் இரானியல் செல்வின், கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள், வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் அமைப்புகளின் பிரதிநிதிகள், வடக்கு - கிழக்கு சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், குரலற்றோருக்கான குரல் அமைப்பினர், சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தின் பிரதிநிதிகள், இரணைமடு கமக்கார அமைப்பின் பிரதிநிதிகள், கிழக்கு தமிழ் விவசாயிகள் அமைப்பினர், யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தினர், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தினர், மயிலத்தமடு மேய்ச்சல் தரை போராட்டக் குழுவினர் என 83 அமைப்புகளின் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். (அ-ம-20)

## சிவகுமாரனின்...

ஏற்பாட்டில் எழுச்சிபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

பொன். சிவகுமாரனின் நெருங்கிய நண்பரும், தியாகி பொன். சிவகுமாரன் நினைவேந்தல் குழுவைச் சேர்ந்தவருமான அ. நித்தியானந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பொன். சிவகுமாரனின் சகோதரி சிவகுமாரி ஈகச்சுடரேற்றி நினைவேந்தல் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து சிவகுமாரனின் உருவச் சிலைக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து நினைவஞ்சலிக் கூட்டமும் நடைபெற்றது.

நிகழ்வில் உரும்பிராயைச் சேர்ந்த பொருளாதார நலிவுற்ற குடும்பங்களைச் சேர்ந்த 50 பேருக்குப் புத்தாடைகள் வழங்கி வைக்கப்பட்டதுடன் சிவகுமாரனின் உருவச் சிலைக்கு அருகில் தாகசாந்தி நிலையம் அமைக்கப்பட்டு நேற்றுக் காலை 9.30 மணி முதல் நண்பகல் 12 மணி வரை பொதுமக்களின் தாகம் தீர்க்கும் பணியும் முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா, ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான எம்.கே. சிவாஜிலிங்கம், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ்தேவானந்தா, தமிழ்ஈழ விடுதலை இயக்கத்தின் முக்கியஸ்தர் விந்தன் கனகரத்தினம், வடமாகாண முன்னாள் கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன், வடமாகாண முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராசா, இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க. சச்சிதானந்தன், சிவசேனை அமைப்பின் முக்கியஸ்தர் என். பி. சிறீந்திரன், ஈரோஸ் அமைப்பின் மூத்த போராளி அங்கயற்கண்ணி மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (அ-ஒ-66)

## சங்கானை...

ஆனால், சங்கானை உதவி பிரதேச செயலர் பிணைப்பணம் செலுத்தவில்லை. இதனால் அவருக்கான சம்பளமும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடான கேள்விக்கு யாழ். மாவட்டச் செயலகத்தால் பதிலளிக்கப்பட்டிருந்தமையும் அந்தச் செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்று பி.ப. 3 மணியளவில் உதயன் அலுவலகத்துக்கு வருகை தந்த உதவிப் பிரதேச செயலர், உதயன் விளம்பரப்பீடத்துக்குள் நுழைந்து அங்கிருந்து உதயன் ஆசிரிய பீடத்தினருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு, செய்தியை யார் வழங்கினார்கள் என்று கேட்டுள்ளார். செய்தி வழங்கியவர் யார் என்ற விவரத்தை வெளிப்படுத்துவது ஊடக தர்மமில்லை எனவும், செய்தி தொடர்பான அவரது கோரிக்கையை எழுத்துமூலம் வழங்குமாறும் ஆசிரிய பீடத்தினர் பதிலளித்துள்ளனர். இதன்போது, நீங்கள்தான் (உதயன் பத்திரிகை) தனக்கு எழுத்துமூலம் விளக்கமளிக்கவேண்டும் எனக் குறிப்பிட்ட அவர் மீளவும் செய்தியை யார் வழங்கியது? என்ற விவரம் தனக்கு தரப்படவேண்டும் எனத் தெரிவித்துள்ளார். அவ்வாறு வழங்க முடியாது என்பதை அவருக்குக் கூறிய போது, அலைபேசியைத்துண்டித்துவிட்டு உதயனின் விளம்பரப் பகுதியிலுள்ள அலுவலகத்தினுள் அத்துமீறி நுழைந்து அலுவலர்களை தனது அலைபேசியில் அச்சுறுத்தும் வகையில் ஒளிப்படம் எடுத்ததோடு, உரத்த தொனியில் அங்கிருந்தவர்களைத் திட்டி, அச்சுறுத்திச் சென்றுள்ளார். ஒரு நிர்வாக சேவைத் தரத்தில் உள்ள அதிகாரி ஒருவர், இவ்வாறு தனது கடமை நேரத்தில் ஊடகமொன்றுக்குள் அத்துமீறி நுழைந்தமையும், அங்கிருந்த ஊழியர்களை அச்சுறுத்தியமையும் திணைக்கள ரீதியாக நடவடிக்கை எடுக்கக்கூடிய பாரதூரமான குற்றங்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)

## பாதுகாப்புச்...

யான ஆதரவு இருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் நேற்று இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

குடும்ப பலம், செல்வ பலம், பரிவார பலம், உறவினர் பலம் இல்லாது, சாதாரண குடும்பத்தில் இருந்து குஜராத் பிரதேசத்தை மையமாகக் கொண்டு, முதலமைச்சராகக் கடமையாற்றி, சிறப்பான அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்து, பின்னர் தொடர்ந்து மூன்று தடவை இந்தியாவின் பிரதமராகியுள்ள மோடிக்கு வாழ்த்துகள். அதேபோல பா.ஜ.க. மற்றும் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்குக்கும் வாழ்த்துகள்.

பிரதமர் நேருவுக்குப் பிறகு, மூன்று முறை பிரதமர் பதவியை வகிக்கும் ஆணையைப் பெற்ற பிரதமர் மோடி, தொடர்ச்சியாக மக்களின் நம்பிக்கையைப் பெற்று, மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்களை முன்னெடுத்தமை மகிழ்ச்சி அளிக்கின்றது.

ஒரு நாடாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நெருங்கிய நட்புறவு நிலவவேண்டும். உலகிலேயே அதிக மக்கள் தொகை கொண்ட நாடான இந்தியாவுக்கு ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்புரிமை வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை விடுக்கின்றேன்.

உலகளாவிய அதிகார மையங்களை நோக்கும்போது, ஐ. நா. பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்கு நிரந்தரப் பிரதிநிதித்துவம் வழங்கப்படவேண்டும் என்பது உண்மையில் சிறந்த நிலைப்பாடாகும். இதற்கு எமது நாடாளுமன்றத்தின் ஆசியும் கிட்டும் - என்றார். (அ-ஒ-44)

## சாரதிகளின்...

9.45 வரை கைதடியிலுள்ள வடக்கு மாகாண பிரதம செயலர் அலுவலகத்துக்கு முன்பாக அரச சாரதிகள் சங்கத்துடன் இணைந்து வெளிநடப்புச் செய்யவுள்ளதாக அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது. வடமாகாண அரச சாரதிகள் சங்கத்தின் போராட்டம் நேற்று மூன்றாம் நாளாகத் தொடர்ந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-66)

## முல்லையிலிருந்து...

தாம் தமிழகத்தில் தஞ்சமடைந்ததாக அவர்கள் தமிழகத்தில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின்போது தெரிவித்துள்ளனர்.

தந்தை, தாய் மற்றும் அவர்களின் நான்கு பிள்ளைகளைக் கொண்ட ஆறு பேரைக் கொண்ட குடும்பமே இவ்வாறு தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ளனர். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அந்த ஆறு பேரையும் தமிழகம் அகதி முகாமுக்குக் கொண்டுசெல்ல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (ம-100-56)

## ரணிலே...

பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.எம். சந்திரசேன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தவுள்ளதாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அவர் அந்த நிலைப்பாட்டை அறிவித்த பின்னரே எமது கட்சியின் தீர்மானம் எடுக்கப்பட்டு, அது கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்சவால் அறிவிக்கப்படும்.

அதேவேளை, தேர்தலை முன்கூட்டி நடத்தியே எமது கட்சிக்கு பழக்கம். எனவே, தேர்தல்களை ஒத்திவைக்கும் முயற்சிக்கு ஆதரவு வழங்கப்படமாட்டாது. எத்தகைய யோசனைகள் வந்தாலும் உரிய நேரத்தில் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற எமது கட்சியின் நிலைப்பாடு மாறாது - என்றார். (அ-ஒ-44)

## தமிழ்த்...

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்தத் தீவில் குறிப்பாகத் தமிழர் தாயகத்தில் தமிழர் குடிப்பரம்பலை நிலைநிறுத்தலும், பிறப்பு வீதத்தை அதிகரித்தலும்.

அனைத்துத் தமிழர் கல்வி அடைவு மட்ட உயர்த்தலும், தாயகக் கிராமங்களில் விஞ்ஞானத்துறை ஆசிரிய வளத்தை அதிகரித்தலும், வளப் பங்கீட்டை உறுதிப்படுத்தலும்.

தமிழர் பிரதேசங்களில் சுகாதார மருத்துவ சேவைகளை மேம்படுத்தலும் மருத்துவமனைகளில் மனிதவளம் குறிப்பாகத் தமிழ்த் துணை மருத்துவ ஆளணி மேம்பாட்டை அதிகரிக்கும் வேலைத்திட்ட முன்னெடுப்பும்.

தமிழர் எதிர்கொள்ளும் விவசாய, மீன்பிடி, கால்நடை வளர்ப்புச் சவால்களை வெற்றி கொள்ளலும், ஏழைத் தமிழரின் நீண்டகால வாழ்வாதாரத்தை மேம்படுத்தலும்.

இளையோர் எதிர்கொள்ளும் போதை, தற்கொலை, விபத்து பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவர முயல்தலும், தமிழ் மாணவர்களின் அறநெறிக் கல்வியை வலுப்படுத்தலும்.

மேற்படி தமிழ்த்தேசிய இருப்பை நீண்டகால நோக்கில் இந்தத் தீவில் பாதிக்கும் அதேநேரம் மிகப் பொருத்தமான வழிவரைபடத்தைக் கொண்டிராத சாமானிய தமிழ்மகனின் அல்லது மகளின் அன்றாடவாழ்வைப் பாதிக்கும் விடயங்களைக் கையாள மூலோபாயக் கொள்கை செயற்றிட்ட வரைவு ஒன்றைத் தயாரித்து வேலைத் திட்டங்களை முன்னெடுக்க இந்நாளில் சபதம் ஏற்போம் - என்றுள்ளது. (அ-ஒ-66)

## அத்துமீறலை...

மன்னாரில் நேற்றுப் புதன்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழக மீனவர்களின் தடைக்காலம் எதிர்வரும் 15ஆம் திகதியுடன் நிறைவுக்கு வருகிறது. தடைக்காலம் முடிந்த பின்னர், அவர்கள் தடை செய்யப்பட்ட இழுவைமடித் தொழிலை எமது கடற்பரப்புக்குள் முன்னெடுப்பார்கள். இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகையை கட்டுப்படுத்த அரசு துரித நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்.

எமது கடல் வளத்தைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு எமக்கு உள்ளது. அந்த வகையில் நாங்கள் மீண்டும் ஒரு கோரிக்கையை விடுக்கின்றோம். இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடிப்பதை நிறுத்த வேண்டும். இவ்வாறு நிறுத்திக்கொண்டால் உங்களுடன் பேசுவதற்கும் இப்பிரச்சினையை இலகுவாக முடித்துக்கொள்வதற்கும், இரு தரப்பும் விட்டுக்கொடுப்புடன் பேசுவதற்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம் - என்றார். (அ-ஒ-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா நேற்று அசத்தல் வெற்றி

**நியூயோர்க், ஜூன் 6**
**உலகக்கிண்ண ரி-20 தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில், இந்திய அணி 8 இலக்குகளால் அயர்லாந்தைத் தோற்கடித்தது.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியா, முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. அயர்லாந்து அணி 96 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்தது. பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட பல்பெர்னி 5, ஸ்ரேர்லிங் 2, ரக்கெர் 10, ரெக்டர் 4 ஏமாற்றத்தை மட்டுமே கொடுத்தனர். அயர்லாந்து அணியின் பெரும் பின்னடைவாக இந்த இலக்குச் சரிவுகளே அமைந்தன. கரீத் 14 பந்துகளில் 26 ஓட்டங்களைக் குவித்து கௌரவ நிலைக்கு அணியைக் கொண்டு சென்றார்.

பந்துவீச்சில் பாண்டியா 3 விக்கெட்களையும், அர்ஷ்டீப் சிங் மற்றும் பும்ரா இருவரும் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணிக்கு ஆரம்ப வீரர் கோலி ஓர் ஓட்டத்துடன் ஏமாற்றினாலும், அணித்தலைவர் ரோகித் மற்றும் ரிஷப் பன்ட் இருவரும் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியை வெற்றியை நோக்கி அழைத்துச் சென்றனர். அணித்தலைவர் ரோகித் அரைச்சதம் கடந்து 52 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் உபாதையால் வெளியேறினார். எனினும், தொடர்ந்தும் களத்தில் நிலைத்து நின்று ஆட்டத்தை வெற்றியுடன் முடித்தார் பன்ட். பன்ட் 26 பந்துகளில் 36 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். (ம)



**வெளிநாடுகளுக்கான துரித பொதிகள்**
சகல நாடுகளுக்குமான விசேட விலைக்கழிவு
11 KG மேற்பட்ட பொதிகளுக்கு
திருமுருகன் பொதிகள் சேவை
321, K.K.S Road, Jaffna
0777 554 528
UK - 1300/=
Canada - 2400/=
Australia - 2300/=
USA - 2400/=

**A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களா நீங்கள்?**
**கல்வி, தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு**



✓ க.பொ.த (உ/த) பரீட்சையில் பெபேறுகள் பெற்ற உங்களுக்கு உயர் கல்வி, தொழில் வாய்ப்புகள். வெளிநாட்டு விசா நடைமுறைகள் தொடர்பாக விளக்கமளிக்கும் கருத்தரங்கு.
✓ வெளிநாட்டில் கல்வி கற்க, குடியேற மற்றும் தொழில் வாய்ப்பிற்கு விண்ணப்பிக்க உள்ளோர்க்கு....
உங்கள் கனவை நனவாக்க
இந்த அரிய வாய்ப்பை தவறவிடாதீர்கள்.
**இடம்: விரிவுரை மண்டபம்**
**இலங்கை தொழில்சார் பல்கலைக்கழகம்**
**திகதி: 09.06.2024, ஞாயிற்றுக்கிழமை**
**நேரம் : 10.00 AM**
ஆர்வமுடையவர்கள் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு விபரங்களை பெற்றுக்கொள்ளவும்.
**நிர்வாக அலுவலர்,**
**இலங்கை தொழில்சார் பல்கலைக்கழகம்.**
**074 234 9120**
(CS 6778) A-1

முல்லைத்தீவில் இருந்து

## கடற்றொழிலுக்குச் சென்ற மூவரைக் காணவில்லை!

முல்லைத்தீவு, ஜூன் 6
முல்லைத்தீவு - புதுமாத்தளன் பகுதியில் இருந்து நேற்றுமுன்தினம் கடற்றொழிலுக்குச் சென்ற மூவரைக் காணவில்லை என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

புதுமாத்தளன் கடற்கரையில் இருந்து, கடற்றொழிலுக்காகச் சென்ற உடையார்கட்டு, மன்னார் மற்றும் திருகோணமலை பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களையே இவ்வாறு காணவில்லை என்று முறையிடப்பட்டுள்ளது.

அவர்களைத் தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-19)

## மழையால் பாதிக்கப்பட்ட தர்ப்பூசணிச் செய்கை

மழை காரணமாக தர்ப்பூசணிச்செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். விசுவமடு தொட்டியடி பிரதேசத்தில் இம்முறை விவசாயிகள் தர்ப்பூசணிச் செய்கையும் மேற்கொண்டிருந்தனர். கடந்த சில தினங்களாக அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த தர்ப்பூசணிகள் கடும் மழை காரணமாக அழிவடைந்தது (ஒ-25- 113)

# தமிழ்ப் பொதுவேட்பாளரால் தமிழருக்கு நன்மையில்லையாம்

கூறுகிறார் சம்பந்தன்; உடனிருந்தார் சுமந்திரன்

கொழும்பு, ஜூன் 6
ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் என்ற மூலோபாயம் பயனற்றது. தென்னிலங்கையில் உள்ள தலைவர்களுடன் பேச்சுகளை முன்னெடுத்தே இறுதியான தீர்மானம் எடுக்கப்படவேண்டும் என்று திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

அதேநேரம், தமிழ் மக்கள் தொடர்சியாக வழங்கி வருகின்ற ஆணையைத் தென்னிலங்கையின் ஆட்சியாளர்கள் நிராகரித்து வருகின்ற நிலையில் தேர்தல்களைத் தொடர்ச்சியாக நடத்தப்படுவதற்கு அப்பால் தமிழ் மக்களின் ஆணையை ஏற்றுக்கொள்வதற்கான அழுத்தங்களையும் பிரயோகிக்கவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக்கு பயணம்மேற்கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவானது, கொழும்பில் உள்ள இரா. சம்பந்தனின் இல்லத்தில் அவரை நேற்றுச் சந்தித்தது. இந்தச் சந்திப்பில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும் பங்கேற்றிருந்தார்.

இலங்கை அரசாங்கம் இந்தியாவுடன் செய்து கொண்ட உடன்பாடுகளையோ, சர்வதேசத்துடன் செய்து கொண்ட உடன்பாடுகளையோ ஏற்று நடைமுறைப்படுத்துவதாக இல்லை. அரசமைப்பில் உள்ள விடயங்களைக்கூட அரசாங்கம் நடைமுறைப்படுத்துவதில் தயக்கங்களைத் தொடர்ச்சியாகக் காண்பித்து வருகின்றது.

மேலும் தமிழ் மக்கள் உள்ளக சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள். ஆகவே அந்த உரித்து தொடர்ச்சியாக மறுக்கப்படுகின்றபோது நிச்சயமாக வெளியக சுயநிர்ணய உரித்தையும் கோருவதற்கான நிலைமைகளே உருவாகும் என்று சம்பந்தன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேநேரம், வடக்கு-கிழக்கில் பேசுபொருளாகியுள்ள தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் சம்பந்தனிடத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழுவினர் கேள்விகளைத் தொடுத்திருந்தனர். அதற்குப் பதிலளித்த சம்பந்தன்,

தமிழ் மக்களின் வரலாற்றில் பொதுவேட்பாளர் போன்ற விடயங்களை எப்போதுமே முன்னிறுத்தியது கிடையாது. அவ்விதமான நிலையில் தற்போது பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவது பொருத்தமற்ற அணுகுமுறையாகவே இருக்கும்.

சமகால சூழல்களின் அடிப்படையில் தமிழ்மக்களை மையப்படுத்தி பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவதால் மக்களுக்கு எவ்விதமான நன்மைகளும் கிடைக்கப்போவதில்லை. பொதுவேட்பாளர் மூலோபாயத்தால் எவ்விதமான நன்மைகளும் கிடைக்கப்போவதில்லை, - என்றார். (ஒ-இ)

**காணி விற்பனைக்கு**
**யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில்**
**A-9 வீதி முகப்புடன் 28 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- பதினெட்டடி பாதை (18).
- கைதடிச் சந்தி 100M தூரம்.
- சித்த வைத்தியசாலை முன்பாக.
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை.
- நகர அபிவிருத்தி அதிகார சபையின் (UDA) அனுமதி பெற்றது.

குரு: 077-029 4164
077-329 4130
077-294 1521

**பணிப்பெண் தேவை**
திருநெல்வேலிப் பகுதியிலுள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு **வீட்டு வேலை** செய்யக் கூடிய **பணிப்பெண் தேவை.**
தொடர்பு:- 077 314 4627
(CS/53276) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.06. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.